© பதிப்புரிமையுடையது

சுட்டெண்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

# Institute of Certified Management Accountants of Sri Lanka
## ஆரம்ப மட்டம்
## நவம்பர் 2015 பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| **பரீட்சைத் திகதி:** | 21 நவம்பர் 2015 | **பக்கங்களின் எண்ணிக்கை :** | 08 |
| **பரீட்சை நேரம்:** | 9.30 மு.ப. – 11.30 மு.ப. | **வினாக்களின் எண்ணிக்கை:** | 50 |

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

1. அனுமதிக்கப்பட்ட நேரம் : **இரண்டு (2) மணித்தியாலம்**.
2. மொத்தம்: **100 புள்ளிகள்.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
4. அறிவுறுத்தியவாறு உமது சுட்டெண்ணை வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் எழுதுக. பரீட்சை முடிவில் பக்கங்களை ஒழுங்காக இணைத்து மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கவும்.
5. **உமது விடைகளை வினாத்தாளிலேயே குறித்துக் காட்டுக**. வினாத்தாளை / வேலைத் தாள்களை பரீட்சை **மண்டபத்திற்கு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.**
6. **பல்தேர்வு வினாக்களுக்கு** சரியான விடையைச் சுற்றி **வட்டமிட்டுக் காட்டுக**. சுருக்கமான விடை தேவைப்படும் வினாக்களுக்கு தரப்பட்ட இடைவெளியில் சுருக்கமாக விடை எழுதுக.
7. பரீட்சார்த்திகள் திட்டமிட முடியாத கணிப்பான்களை உபயோகிக்கலாம.

| **பாடம்** | **பாடக் குறியீடு** |
|---|---|
| **முகாமைக் கணக்கியல் அடிப்படைகள்**<br>**Management Accounting Fundamentals** | **(MAF / FL 1 - 101)** |

---

(1) முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் முகாமைக்கு பயனள்ளதாக இருப்பது:

(i) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான நிறுவனத்தின் இலாபத்தினை தெரிந்துகொள்ள
(ii) நிறுவனத்தால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவையின் கிரயத்தை தெரிந்துகொள்ள.
(iii) செய்யும் செயற்பாடு அல்லது வியாபாரச் செயன்முறையின் கிரயத்தை தெரிந்துகொள்ள.

மேலே கூறப்பட்டவற்றில் சரியானவை எவை?

(a) மேற்கூறிய எல்லாம்.
(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i) மற்றும் (iii) மாத்திரம்
(d) மேற்கூறிய எவையுமல்ல.

(2) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியானவை எவை?

(i) நிதிக்கணக்கீடு ஒரு வேலைச் சட்டகத்தினுள் தொழிற்படும் அதேவேளை, முகாமைக் கணக்கீடு எத்தகைய கண்டிப்பான விதிகளையும் கொண்டிருக்கவில்லை.
(ii) நிதிக்கணக்கீட்டுத் தகவல்கள் வரலாற்று ரீதியானவை; முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் எதிர்கால அடிப்படையில் அமைந்தவை.
(iii) நிதிக்கணக்கீட்டுத் தகவல்கள் அனேகமாக நாணயத்தன்மை கொண்டவை; ஆனால், முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் நாணய மற்றும் நாணயமல்லாத தன்மையுடையவை.

(a) (i) மற்றும் (iii) மாத்திரம்
(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) மேற்கூறிய எல்லாம் சரியானவை.
(d) மேற்கூறிய எவையும் சரியானவை அல்ல.

(3) கீழ்வரும் எந்தத் தரப்பினரை கணக்கீட்டுத் தகவல்களின் பயன்படுத்துனராக கருமமுடியும்?

(i) முகாமையாளர்கள், பங்குதாரர்கள்

(ii) கடன்கொடுனர்கள் (Lenders), அரசாங்கம்

(iii) கடன்கொடுத்தோர் (Creditors), ஊழியர்கள்

மேலே தரப்பட்டுள்ளனவற்றில் <u>சரியானவை</u> எவை?

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்

(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்

(c) (i) மற்றும் (iii) மாத்திரம்

(d) மேற்கூறிய எல்லாம்.

(4) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் <u>சரியானவை</u> எவை?

(i) கிரயப் பொருள் என்பது வேறான கிரய அளவீடு பதியப்பட்ட வாடிக்கையாளர், உற்பத்திப் பொருள், தொழிற்பாடு ஆகியவற்றை குறிக்கும்.

(ii) தொக்கு மதிப்பீடு, இலாபங்கள் மற்றும் ஐந்தொகை உருப்படிகளை நிர்ணயிக்க கிரயத் தகவல்கள் தேவைப்படும்.

(iii) கிரய அலகு என்பது கிரயம் தீர்மானிக்கப்படும் பொருள் அல்லது சேவையின் ஒரு அலகு.

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்

(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்

(c) (i) மற்றும் (iii) மாத்திரம்

(d) மேற்கூறிய எல்லாம்

(5) சில கிரய அலகுகள் இரு பகுதிகளால் ஆனவை. உதாரணமாக, வைத்தியசாலையொன்றின் கிரய அலகு நாளொன்றிற்கான நோயாளர்கள். இந்த இருபகுதி கிரய அலகுகள் எவ்வாறு அழைக்கப்படும்? ______________________________.

(6) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் பொறுப்பு நிலையத்தை (responsibility centre) சரியாக விபரிப்பவை எவை?

(i) பொறுப்புக் கணக்கீடு காரணமாக பொறுப்பு நிலையம் ஏற்படுத்தப்படும்.

(ii) பொறுப்பு நிலையம் என்பது ஒரு முகாமையாளர் பொறுப்பாகவும் வகைகூறவும் ஆளாகும் ஒரு அமைப்பு அலகாகும்.

(iii) பொறுப்பு நிலையம், பொறுப்புக் கணக்கீட்டின் ஊடாக மீளாய்வு செய்யப்படும்.

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்

(b) (i) மற்றும் (iii) மாத்திரம்

(c) (ii) மற்றும் (iii) மாத்திரம்

(d) மேற்கூறிய எல்லாம்

**வினா இலக்கங்கள் 7 மற்றும் 8 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

கீழே தரப்பட்ட நிரலிலிருந்து இரண்டு உற்பத்திக் கிரயங்களை இனங்கண்டு, அவற்றின் ஆங்கில எழுத்தை தரப்பட்டுள்ள இடைவெளிகளில் (வினா 7 மற்றும் 8) எழுதுக.

a. கணக்காளரின் சம்பளம்.
b. தொழிற்சாலைப் பொறித்தொகுதியின் தேய்மானம்
c. இயந்திர இயக்குனரின் விடுமுறைக் கொடுப்பனவு (holiday pay)
d. வாடிக்கையாளருக்கு தரப்படும் வியாபாரக் கழிவுகள்
e. முடிவுற்ற பொருட்களின் பண்டகசாலைக்கான வாடகை
f. மூலப்பொருட் பண்டக சாலையின் பாதுகாப்பு ஊழியர் சம்பளம்.

(7) ______________________________________________

(8) ______________________________________________

(9) முதன்மைக் கிரயம் (Prime cost) உள்ளடக்குவது:

(i) பொருளை உற்பத்திசெய்து விற்பனை செய்வதில் பயன்படுத்திய பொருட்களின் கிரயம்.

(ii) உற்பத்திப் பொருள் அல்லது சேவையை உருவாக்க பயன்படுத்திய ஊழியர் கிரயம்.

(iii) நிருவாக மேந்தலைகள்

மேலே தரப்பட்டுள்ளனவற்றில் **சரியானவை** எவை?

(a) (i) மற்றும் (iii) மாத்திரம்

(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்

(c) (i) மற்றும் (ii) மாத்திரம்

(d) மேற்கூறிய எல்லாம்

(10) "கிரய நடத்தையின் அடிப்படைத் தத்துவம், செயற்பாட்டு மட்டம் அதிகரிக்கும்போது, வழக்கமாக கிரயம் அதிகரிக்கும்". இந்தக் கூற்று **சரியானதா**? _________________.

(11) கீழ்வருவனவற்றுள் பகுதி-நிலையான கிரயம் (semi-fixed cost) அல்லது பகுதி-மாறும் கிரயம் **அல்லாதது** எது?

(a) இயந்திர பராமரிப்புச் செலவுகள்

(b) விளம்பரச் செலவுகள்

(c) பொறித்தொகுதிக்கான மின்சாரச் செலவுகள்

(d) மேற்பார்வையாளருக்கான கொடுப்பனவு

(12) XX கம்பனி பைகளை உற்பத்தி செய்கின்றது. உற்பத்தி 10,000 மற்றும் 12,000 அலகுகளாக உள்ள போது கிரயம் முறையே ரூபா 60,000/- மற்றும் ரூபா 80,000/-. ஒரு அலகின் எல்லைக் கிரயம் என்ன?

_______________________________________________

_______________________________________________

(13) மொத்தக் கிரயம் TC ஆலும், உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை N ஆலும் குறிக்கப்படுவதாகக் கொண்டு தரப்பட்டுள்ள தகவல்களுக்கு பொருத்தமான மொத்தக் கிரயச் சமன்பாட்டை எழுதுக.

| மாதம் | உற்பத்தி அலகுகள் | மொத்தக் கிரயம் (ரூபா) |
|---|---|---|
| 1 | 500 | 31,000 |
| 2 | 525 | 31,300 |
| 3 | 510 | 31,120 |

_______________________________________________

_______________________________________________

**வினா இலக்கங்கள் 14 - 17 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

A, B, C மற்றும் D இனால் குறிப்பிட்ட வெற்றிடங்களில் வரவேண்டிய பெறுமதிகளை எழுதுக.

| மாதம் | உற்பத்தி மட்டம் (அலகுகள்) | கிரயம் (ரூபா) | நிலையான கிரயம் | ஒரு அலகின் மாறும் கிரயம் |
|---|---|---|---|---|
| 1 | 9,000 | 633,000 | **A** | |
| 2 | 9,800 | 685,800 | | **B** |
| 3 | 10,500 | 732,000 | | |
| 4 | **C** | 626,400 | | |
| 5 | 9,900 | **D** | | |

(14) A ________________________________

(15) B ________________________________

(16) C ________________________________

(17) D ________________________________

(18) பொருட்கள் பண்டகசாலையில் பெறப்படும் ஒழுங்கில் வினியோகிக்கப்படும் எனும் எடுகோளின் அடிப்படையிலான தொக்கு மதிப்பீட்டு முறை அழைக்கப்படுவது: ________________________.

**வினா இலக்கங்கள் 19 - 22 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

FIFO முறைத் தொக்கு மதிப்பீட்டின்படி, A, B, C மற்றும் D இனால் குறிப்பிட்ட வெற்றிடங்களில் வரவேண்டிய பெறுமதிகளை எழுதுக

| திகதி | பெறுவனவுகள் | | | வழங்கல்கள் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணியம் | விலை | பெறுமதி | கணியம் | விலை | பெறுமதி | கணியம் | விலை | பெறுமதி |
| 01/05/2015 | 1,200 | 10 | 12,000 | | | | | | |
| 05/05/2015 | 850 | 12 | 10,200 | | | | **A** | | 22,200 |
| 10/05/2015 | | | | 350 | 10 | 3,500 | 1,700 | | **B** |
| 16/05/2015 | | | | 1,200 | | 12,700 | 500 | 12 | **C** |
| 18/05/2015 | 750 | 14 | 10,500 | | | | 1,250 | | 16,500 |
| 29/05/2015 | | | | 750 | | **D** | 500 | 14 | 7,000 |

(19) A ________________________________

(20) B ________________________________

(21) C ________________________________

(22) D ________________________________

(23) வருடாந்த தொக்குக் கிரயத்தை இழிவுபடுத்தும் நோக்கில் ஒரு தடவையில் கட்டளையிடப்படும் தொக்கின் அளவு அழைக்கப்படுவது: ________________________________.

**வினா இலக்கங்கள் 24 மற்றும் 25 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

கீழே தரப்பட்ட தகவல்களிலிருந்து உற்பத்திசெய்த துண்டுவேலை மணித்தியாலம் மற்றும் ஊழியர் கொடுப்பனவினை கணிக்குக.

| | அலகொன்றின் துண்டுவேலை மணித்தியாலம் |
|---|---|
| உற்பத்திப் பொருள் A யின் 38 அலகுகள் | 0.6 மணித்தியாலம் |
| உற்பத்திப் பொருள் B யின் 42 அலகுகள் | 0.8 மணித்தியாலம் |

ஊழியர்களுக்கு உற்பத்தி செய்யும் துண்டுவேலை மணித்தியாலத்திற்கு ரூபா 250/- செலுத்தப்படும்.

(24) உற்பத்தி செய்த துண்டுவேலை மணித்தியாலம்: ________________________________

(25) ஊழியர்களுக்கான கொடுப்பனவு: ________________________________

(26) “அடையும் செயற்பாட்டு மட்டம் தொடர்பில் மேந்தலைகளின் மாற்ற அடிப்படையில் மேந்தலைக் கிரயங்களின் நடத்தையை மாறும் மேந்தலைகள், நிலையான மேந்தலைகள் மற்றும் பகுதி மாறும் மேந்தலைகள் என வகைப்படுத்தலாம்”. இக் கூற்று சரியானதா? ___________________.

(27) உண்மையாக இறுக்கப்பட்ட மேந்தலை – உறிஞ்சப்பட்ட மேந்தலை = _______________ , எனில் மேந்தலை மிகையாக உறிஞ்சப்பட்டிருக்கும் (over-absorbed).

(a) நேர் விடை
(b) மறை விடை
(c) விடை 1 இலும் அதிகமானது.
(d) மேற்கூறிய எவையும் அல்ல

(28) ஒரே மேந்தலை விகிதமானது நேர் இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 5/- ஆகவும், நிறுவன மொத்த மேந்தலைகள் ரூபா 366,000/- ஆகவும் இருப்பின், இந்தக் காலத்தில் தொழிலாளர்கள் வேலைசெய்த மணித்தியாலங்கள் என்ன?

_______________________________________________

_______________________________________________

(29) ‘மேலதிகமாக ஒரு அலகு பொருள் அல்லது சேவை உற்பத்தி செய்யப்படும்போது, அதிகரிக்கும் கிரயப் பகுதி’ - இந்தக் கூற்று எதனை விபரிக்கின்றது?:

(a) சராசரிக் கிரயம்
(b) நேர்க் கிரயம்
(c) உறிஞ்சற் கிரயம்
(d) எல்லைக் கிரயம்

(30) BB நிறுவனம் 2,000 அலகுகளை அலகொன்று ரூபா 650/- விலையில் விற்பனை செய்கின்றது. 500 அலகுகளின் மாறும் கிரயம் ரூபா177,500/-. அலகொன்றின் பங்களிப்பு என்ன?

(a) ரூபா 1,122,500/-
(b) ரூபா 295/-
(c) ரூபா 561.25/-
(d) மேற்கூறிய எவையும் அல்ல

(31) ஒரு நிறுவனம் உறிஞ்சற் கிரயமிடல் முறைமையை பயன்படுத்துவதுடன், தரப்பட்ட காலத்தில் அலகுக் கிரயம் மாறாது இருப்பின், இலாபச் சார்பு எதுவாக இருக்கும்?

(a) (அலகொன்றிற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலை x உற்பத்தி செய்த அலகுகள்) – மாறும் கிரயம்
(b) (அலகொன்றிற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட மாறும் உற்பத்தி மேந்தலை x உற்பத்தி செய்த அலகுகள்) – நிலையான கிரயம்
(c) (அலகொன்றிற்கான உண்மையான மாறும் உற்பத்தி மேந்தலை x உற்பத்தி செய்த அலகுகள்) – நிலையான கிரயம்
(d) (அலகொன்றிற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலை x உற்பத்தி செய்த அலகுகள்) – நிலையான கிரயம்

(32) சகல கணக்கீட்டுத் தேவைகளுக்கும் பொதுவான உள்ளீட்டை பயன்படுத்தி நிதிக் கணக்குகள் மற்றும் முகாமைக் கணக்குகள் இரண்டையும் வழங்கும் கணக்கீட்டுத் தரவுகளின் தொடை எது?

(a) இடைப்பூட்டுக் கணக்குகள் (Interlocking accounts)
(b) சுயாதீன கணக்குகள் (Independent accounts)
(c) ஒன்றிணைந்த கணக்குகள் (Integrated accounts)
(d) எல்லைக் கணக்குகள் (Marginal accounts)

(33) “ஒன்றிணைந்த கணக்கீட்டு முறைமையில் பொருட்களுக்கு செலவு இறுக்கப்படும்போது, உண்மையாக செலுத்திய அல்லது செலுத்தவேண்டிய தொகை பொருத்தமான வளங்கள் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டு, காசு அல்லது கடன்கொடுத்தோர் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்படும்”. இந்தக் கூற்று சரியானதா? ________________________________________.

(34) கீழ்வருவனவற்றுள் ஒரு சேவைப் பிரிவுக்கு அகப் பணிக் கிரயமிடல் முறைமையின் (internal job costing system) அனுகூலங்கள் எவை?

(i) செலவுகளின் யதார்த்தமான (realistic) ஒதுக்கீடு.
(ii) பயன்படுத்தும் பிரிவுகளின் அதிகரித்த பொறுப்பும், தெரிந்துகொள்ளலும் (awareness).
(iii) சேவைப் பரிவுக் கிரயங்களை கட்டுப்படுத்தும் சாத்தியம்.

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்
(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i) மற்றும் (iii) மாத்திரம்
(d) மேற்கூறிய எல்லாம்

(35) கீழ்வருவனவற்றுள் ஒப்பந்தக் கிரயமிடலின் குணாம்சமாக கருதக்கூடியது எது?

(i) வாடிக்கையாளரின் விசேட தேவைகளுக்கு ஏற்ப வேலைகளை மேற்கொள்ளல்.
(ii) வேலை ஒப்பீட்டளவில் நீண்ட காலத்தை எடுக்கும்.
(iii) இந்தக் கிரயமிடல் முறை பணிக் கிரயமிடல் முறையை ஒத்தது.

மேலே தரப்பட்டுள்ளனவற்றில் <u>சரியானவை</u> எவை?

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்
(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i) மற்றும் (iii) மாத்திரம்
(d) மேற்கூறிய எல்லாம்

(36) அன்றுவரை அத்தாட்சிப்படுத்திய வேலைப் பெறுமதி – அத்தாட்சிப்படுத்திய வேலைக் கிரயம் = _______________

(a) நியம இலாபம் (Standard profit)
(b) இலாபம்
(c) பெயரளவு இலாபம் (Notional profit)
(d) மேற்கூறிய எவையும் அல்ல

(37) நிறுவனத்திற்கு இலாபமோ, நட்டமோ ஏற்படுத்தாத செயற்பாட்டு மட்டம் அழைக்கப்படுவது: ________________________________________________________.

(38) அலகு விற்பனை விலை ரூபா 225/- ஆகவும், மாறும் கிரயம் ரூபா 128/- ஆகவும் இருப்பின், அந்தப் பொருளின் 500 அலகுகளின் பங்களிப்பு என்ன?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(39) சமப்பாட்டு அட்டவணை (break-even chart) வரைபுகள் (கோடுகள்) தொடர்பில் சரியான கூற்றுக்கள் எவை?

(i) விற்பனைக் கோடு உற்பத்திப் புள்ளியில் ஆரம்பிக்கும்.
(ii) நிலையான கிரயக் கோடு கிடை அச்சிற்கு சமாந்தரமாகச் செல்லும்.
(iii) மொத்தக் கிரயக் கோடானது, நிலையான கிரயக் கோடு கிடை அச்சை வெட்டும் புள்ளியில் ஆரம்பிக்கும்.

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்
(b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i) மற்றும் (iii) மாத்திரம்
(d) மேற்கூறிய எல்லாம்

**வினா இலக்கங்கள் 40 மற்றும் 41 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

ஒரு நிறுவனத்திற்கு கிடைத்துள்ள கூலி மணித்தியாலம், மற்றும் மூலப்பொருள் என்பன முறையே 29,000 மணித்தியாலமும், 21,000 கி.கிராம்களும் ஆகும். நிறுவனம் பொருள் X இல் 3,000 அலகுகளும், பொருள் Y இல் 4,000 அலகுகளும் உற்பத்தி செய்யவேண்டும்.

| | **பொருள் X** | **பொருள் Y** |
|---|---|---|
| மூலப்பொருள் | அலகொன்றிற்கு 5 கி.கிராம் | அலகொன்றிற்கு 2 கி.கிராம் |
| கூலி | அலகொன்றிற்கு 3 மணித்தியாலம் | அலகொன்றிற்கு 5 மணித்தியாலம் |

(40) மட்டுப்படுத்தற் காரணி ( limiting factor) எது? ________________________________

(41) மட்டுப்படுத்தற் காரணியின் பற்றாக்குறை எவ்வளவு? ____________________________

**வினா இலக்கங்கள் 42 மற்றும் 43 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

அலகொன்றின் விற்பனை விலை ரூபா 200/- ; மாறும் கிரயம் ரூபா 40/-. நிலையான கிரயமும் எதிர்பார்க்கும் இலாபமும் முறையே ரூபா 50,000/- மற்றும் ரூபா 30,000/-.

(42) நிறுவனம் அதன் இலக்கினை அடைவதற்கு எதிர்பார்க்கும் வருமானம் என்ன?
(a) ரூபா 30,000/-
(b) ரூபா 50,000/-
(c) ரூபா 80,000/-
(d) மேற்கூறிய எவையும் அல்ல

(43) இலக்கினை அடைவதற்கு விற்கப்படவேண்டிய அலகுகளின் எண்ணிக்கை என்ன?
(a) 500 அலகுகள்
(b) 312.5 அலகுகள்
(c) 812.5 அலகுகள்
(d) மேற்கூறிய எவையும் அல்ல

(44) கீழ்வருவனவற்றுள் சாத்தியமான பிரதான பாதிடற் காரணிகள் (budget factors) எவை?
(i) காசுக் கிடைப்பனவு.
(ii) வினியோக மற்றும் விற்பனை வளங்கள்.
(iii) பிரதான மூலப்பொருட் கிடைப்பனவு.

(a) (ii) மற்றும் (iii) மாத்திரம்
(b) (i) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i) மற்றும் (ii) மாத்திரம்
(d) மேற்கூறிய எல்லாம்

(45) எத்தகைய சந்தர்ப்பத்தில் கடன்கொடுத்தோருக்கு முன்னதாகச் செலுத்தி கழிவுகள் பெறவும், கடன்பட்டோர் மற்றும் தொக்குகளை அதிகரிப்பதன்மூலம் விற்பனையை அதிகரிக்கவும் முகாமை முயற்சிக்கும்?

(a) நிறுவனத்தில் குறுங்கால நிதிப் பற்றாக்குறை உள்ளபோது.
(b) நிறுவனத்தில் நீண்டகால நிதிப் பற்றாக்குறை உள்ளபோது.
(c) நிறுவனத்தில் குறுங்கால நிதி மிகை காணப்படும்போது.
(d) நிறுவனத்தில் நீண்டகால நிதி மிகை காணப்படும்போது.

(46) நிறுவனம் ஒரு அலகை பூர்த்தியாக்க 45 செயற்திறனான கூலி மணித்தியாலங்கள் தேவைப்படும் . நேரம் (idle time) உள்ளடக்கப்படவேண்டி உள்ளது. கூலி வீதம் மணித்தியாலத்திற்கு ரூபா 150 எனில், இந்தப் பொருளின் பத்து அலகுகளுக்கு நியம கூலிக்கிரயம் என்ன?

________________________________________

________________________________________

________________________________________

(47) ஒரு உற்பத்திச் செயன்முறையில் மணித்தியாலத்திற்கு நியமக் கிரயம் ரூபா 10/- வீதம் 30,000 கூலி மணித்தியாலம் வேலை செய்யப்பட்டது. இந்தக் காலத்தில் கூலி வினைத்திறன் முரண் ரூபா 5,000/- (சாதகம்). உற்பத்தி செய்யப்பட்ட நியம மணித்தியாலம் எவ்வளவு?

(a) 35,000
(b) 30,000
(c) 30,500
(d) மேற்கூறிய எவையும் அல்ல

**வினா இலக்கங்கள் 48 மற்றும் 49 கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.**

ஒரு குறிப்பிட்ட மாதத்தில் நிலையான உற்பத்தி மேந்தலை ரூபா 100,000/-. உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை 5,000 அலகுகள். இந்த மாதத்தின்போது நிலையான உற்பத்தி மேந்தலை செலவின முரண் ரூபா 20,000/- பாதகம்.

(48) நியம நிலையான மேந்தலை விகிதம் என்ன?

________________________________________

________________________________________

(49) உண்மையாக உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை என்ன?

________________________________________

________________________________________

________________________________________

(50) விற்பனை கனவளவு இலாப முரண் =

(பாதிட்ட விற்பனை அலகு – உண்மை விற்பனை அலகு) × ________________

(a) நியம இலாபம்
(b) அலகொன்றின் உண்மை இலாபம்
(c) உண்மை இலாபம்
(d) அலகொன்றின் நியம இலாபம்

**(50 × 2 புள்ளிகள் = மொத்தம் 100 புள்ளிகள்)**

வினாப்பத்திர முடிவு